4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) மதிப்பீட்டுக் குழு தேர்தல்—நடைமுறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு (Estimates Committee) ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்கள் 5–8-1980 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்ற பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் செயலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 6–8–1980 புதன் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 7–8–1980 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடத்தின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 8–8–1980 வெள்ளிக் கிழமை காலை 9–00 மணிக்கும் பகல் 1–00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

6. தனியார் அலுவல்கள்

தனித் தீர்மானம்—மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கல்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை நான் மொழிகிறேன்:

''மாநிலங்களையும், ஒட்டு மொத்தமாக இந் நாட்டினையும் முழுமையாகவும் விரைவாகவும் மேம்படுத்துவதற்கு தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களுக்கு வழங்கப்பெற்றுள்ள அதிகாரங்கள் போதுமானதல்லவென்று இந்த அவை கருதுகின்றது. எனவே, உடனடியாக மாநிலங்களுக்கு நிதி மற்றும் ஏனைய இனங்களில் கூடுதல் அதிகாரம் வழங்க அரசியலமைப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் செய்யும் வகையில் அவசர நடவடிக்கை எடுக்க, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச முதல் அமைச்சர்களின் மாநாடு ஒன்றினை இந்தியப் பிரதமர் கூட்டவேண்டும் என்று மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்கின்றது.''

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தோழர் உமாநாத் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.